**வெலிகந்த பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 03 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெலிகந்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தின் கீழ் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 700,838 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 1,054,126 தொகைக்கான நூலகப் புத்தகங்களின் பெறுமதி ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| 150(1), 152(1) மற்றும் 153(1) ஆம் பிரிவுகள் | கைத்தொழில்கள், வர்த்தகங்கள், திறந்தொழில் மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பான அட்டவணை தயாரிக்கப்பட்டு, ஆண்டின் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

(ஆ) சுற்றறிக்கைகளும் கடிதங்களும்

| | |
|---|---|
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மே 26 திகதிய இலக்கம் என்ஸீ/பீ/எல்ஜீ/ ஏ/14/2 மற்றும் 2015 கொண்ட கடிதம் | பிரதேச சபையினால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக நிருவாகக் குழுவின் தீர்மானம் எடுத்திருக்கவில்லை. அத்துடன் அரச பெறுகைகள் வழிகாட்டலில் விதிக்கப்பட்டுள்ளவாறு பெறுகைகள் குழு ஒன்று மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன நியமிக்கப்படாமல் பெறுகைகள் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,120,053 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,084,286 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) சபைக்குச் சொந்தமான வருமான மூலவளங்களை இனங்காணாமல் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் வருமானங்கள் சேகரிப்பதற்காக போதியளவு செயற்பாடுகள் மேற்கொள்ளாமையால் சில வருமான விடயங்களில் உள்ளவாறான வருமானம், மதிப்பீட்டு வருமானத்தை விட மிகவும் குறைந்த பெறுமதியில் காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 238,296 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாகனத் தளம் மற்றும் களஞ்சிய அறை பயன்படுத்தப்பட்டு 8 மாதங்கள் முடிவடைய முன்னர் உடைத்து அகற்றப்பட்டிருந்தது.

(இ) கடந்த ஆண்டில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து சபைக்கு வழங்கியிருந்த ரூபா 235,821 தொகை பெறுமதியான 213 கல்வணய்ஸ் குழாய்கள் சபையின் முன்னைய மந்திரிமார்களினால் எடுத்துச்சென்று மீண்டும் திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை. அத்துடன் பொறுப்புச் சொல்பவர்களிடம் குறிப்பிட்ட பெறுமதியை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் பல மாதங்களாக காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி மறைப் பெறுமானம் ஒன்றினைக் கொண்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 277,214 இற்கான மறைப் பெறுமதியாக இருந்தது.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) நிருவாகக் குழுக் கூட்டங்கள் நடாத்துதல் மற்றும் தீர்மானங்கள் எடுத்தல் முறையான நடைமுறை ஒன்றின் படி நடைபெற்றிருக்கவில்லை. அத்துடன் குழுத் தீர்மானங்கள் பதிவு செய்திருந்த பதிவேடு மிகவும் முறைசாரா நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்டிருந்த 11 பதவிகளில் வெற்றிடங்கள் மற்றும் 04 பதவிகளில் மிகைகள் காணப்பட்டதுடன் 06 ஊழியர்கள் அமைய அடிப்படையில் மீளாய்வாண்டின் போது சேர்க்கப்பட்டிருந்தனர். இதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 19(1)(1) இன் பிரகாரம் பதவிகள் ஏற்படுத்துதல் மற்றும் சம்பளங்கள் நிர்ணயித்தல் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதியில் 01/2014 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்டகால தூரநோக்குடன் பிரதேச சபை சட்டத்தில் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடைவதை இலக்காகக் கொண்ட செயற்பாடுகள் அடங்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை.

**4.2 உள்ளக் கணக்காய்வு**

சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு விடயங்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) விளைவற்ற சொத்துக்கள்**

(i) அரிசி மா மற்றும் அரிசியுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களுக்காக 2008 மற்றும் 2009 ஆண்டுகளின் போது ரூபா 613,500 பெறுமதியான உபகரணங்கள் வடமத்திய மாகாண முதலமைச்சில் இருந்து கிடைத்திருந்ததுடன் 2016 மார்ச் மாதம் வரையும் அவ் உபகரணங்களை எதிர்ப்பார்த்த குறிக்கோள்களுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

(ii) உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கியிருந்த பணம் மற்றும் வெலிகந்த பிரதேச சபையின் பணம் எனக் கூட்டுத்தொகை ரூபா 750,000 தொகை செலவிடப்பட்டு திண்மக் கழிவுப்பொருள் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2007 ஆண்டின் போது வெலிகந்த சந்தை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் 8 வருடங்களை விட கூடுதலான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) சபைக்குச் சொந்தமான WPLE-7473 கொண்ட மஹேந்திரா கப் வண்டியினைத் திருத்தி வேலை செய்ய முடியுமெனினும், 2 வருடங்களை விட மிகையான காலம் முதல் கப் வண்டி திருத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பண்டக் கணிப்பீடு**

2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருடாந்தப் பண்டக் கணிப்பீடு ஒன்று நடத்தியிருக்கவில்லை.

**4.5 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2009 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 மார்ச் வரை பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அது தொடர்பாக உயர் முகாமைத்துவத்தினாலும் கவனம் ஏதும் செலுத்தியிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்